**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Hypocrisy in the Viewpoint of Naalirandu

**Dr K.R. Kamala Murugan,** Assistant Professor in Tamil**,** Queen Mary's College, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0125-6855**
**DOI: 10.5281/zenodo.6619373**

## Abstract

*Some good qualities are created from the high qualities of the human race that are moulded into the highest race in the world. Our Tamil forefathers have instructed us in their literature to point out the traits of those who possess certain good qualities as opposed to those of evil qualities. Among them, hypocrisy (kayamai) has been described as separate powers of evil in the "Thirukkural" and "Naladiyar". There is lots of evidence that show the pinnacle of morality and bitterness of hypocrisy in life. The hypocritics are like the dead people living in land without any use. Such messages are elaborated in this study in such a way that we perceive by our action and through the effect of our knowledge to avoid it.*

**Keywords**: *Naaladiyar*, *Thirukkural*, Kayamai, hypocrisy

## References

[1] Athiveera Ramapandiyan. *Narunthogai.* New Century Book House, Chennai.
[2] Avvaiyar. *Atthisoodi*. Saradha Pathipagam, Chennai -75.
[3] Avvaiyar. *Kondraivendan* – Saradha Pathipagam, Chennai-75.
[4] Samana Munivargal. *Naladiyar*. Varthamananan Pathipagam, Chennai-17.
[5] Thiruvalluvar. *Thirukkural.* Thendral Nilayam, Chidambaram-1.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நாலிரண்டின் பார்வையில் கயமை

**முனைவர் கே. இரா. கமலாமுருகன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
இராணி மேரி கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0125-6855**
**DOI: 10.5281/zenodo.6619373**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகில் உயர் இனமாகச் சுட்டப்படும் மனித இனத்தின் உயர் தகுதிகளாக சில குணங்கள் சுட்டப்படுகின்றன. இந்த உலகினில். ஆனால், அந்த குணங்களுக்கு எதிரான சில குணங்களை உடையவர்களுக்குரிய இயல்புகளை எடுத்துரைக்கும் வகையில் நம்முடைய முன்னோர்கள் தம் இலக்கியங்களில் அறிவுறுத்தியுள்ளனர். அவற்றுள் இழி குணமாகிய கயமை என்ற நிலையினை திருக்குறளின் பொருட் பாலிலும் நாலடியாரிலும் தனித்த அதிகாரங்களாக விளக்கப்பட்டுள்ளன. சான்றாண்மை என்பது ஒழுக்கத்தின் உச்சமாகவும் கயமை என்பது இழி குணத்தின் எச்சமாகவும் சுட்டப்படுகின்றன. கயவர்கள் மக்களைப் பொன்றே தான் அவர்களும் இருப்பார்கள். நாம் நாம் அறிவினால் அவர்களது செயல் விளைவால் உணர்ந்து தெளிதல், நாம் அதனைச் செய்யாது தவிர்த்தல் என்பதனைப் பின்பற்றும் வகையில் இச்செய்திகள் இவ்ஆய்வில் விரித்துரைக்கப்படுகின்றன.*

**திறவுச்சொற்கள்:** நாலடியார், திருக்குறள், கயமை, கயவர்கள்.

**முன்னுரை**

உலகில் உள்ள மணி இனம் அனைத்தும் ஒருங்கே உவப்புடன் வாழும் வழிமுறைகளுக்கான நற்சிந்தனை தெளிந்த நோக்கில் எடுத்தியம்பிதமிழில் தோன்றினாலும் உலகின் பெரும்பான்மை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, ‘உலகப்பொதுமறை’ என்று போற்றப்படும் நூல் திருக்குறள். திருக்குறளின் பெரும்பான்மையான சிந்தனைகளை எடுத்துரைத்திடும் நூல்களில் நாலடியார் சிறப்பிடம் பெற்றுள்ளது. அவ்வகையிலான இரு இலக்கியங்களும் பேசும் ‘கயமை’ தொடர்பான சிந்தனைகளை ஆய்ந்துரைப்பதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**கயமை**

இழிகுணம் என்ற செயல் தன்மையினை சுட்டும் வகையில் கயமை என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. மனிதர்களின் இருவகையான குணங்களில் மற்றவர் வெறுக்கும் இயல்பினை உடையனவாய் இழி குளத்தின் செயல்கள் அமைகின்றன. அத்தகைய செயல்பாடுகளை செயல்தன்மை உடையவர்களை திருவள்ளுவர் நமக்கு அடையாளம் காட்டுகின்றார். திருக்குறளில் பொருட்பாலின் நிறைவு அதிகாரமான நூற்றிஎட்டாவது அதிகாரத்தினை கயமை என்னும் தலைப்பினைக் காணமுடிகின்றது. நாலடியார் முப்பத்தைந்து மற்றும் முப்பத்தாறாவது அதிகாரங்களில் கீழ்மக்கள் இயல்பு மற்றும் கயமை குறித்துப் பேசுகின்றது.

**கயவர் யார்?**

கீழ் என்பதான இரு எழுத்துக்களின் மூலம் கீழ்மை, இழிவு, தாழ்மை, கயமை, போன்ற அனைத்து நிலையிலும் சுட்டப்படும் இழிகுணம் ஆகும்.

**"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்" (திருக்குறள் – 1078)**

என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். நாலடியார்,

**"ஆர்த்த அறிவினர் ஆண்டினை யராயினும்**
**காத்தோம் பித்தம்மை அடக்கும் மூத்தொறூஉம்**
**தீத்தொழிலே கன்றித்திராதந் தெருவைபோல்**
**போத்தறார் புல்லறி வினார்" (நாலடியார் – 351)**

என்று எடுத்துரைப்பதன் மூலம் மேன்மக்கள் தவறு செய்தால் திருத்திக்கொள்ளும் இயல்புடையவர் ஆவார்கள். கீழ்மக்கள் அதனையே தொடர்வார்கள் என்று பேசுகின்றார். திரையிசை "தப்பு செய்தவன் திருந்தப்பாக்கனும், தவறு செய்தவன் வருந்தியாகனும்" என்று சுட்டுகின்றது.

**கயவரின் தோற்றம்**

உருவத்தில் கீழ்மைக்குணம் உடையகயவர் எவ்வாறு இருப்பார்கள் என்று கூறுகின்ற போது வள்ளுவர் அவர்களும் மனிதர்களைப் போலவே இருப்பார்கள் என்று கூறுகின்றார். இதனை,

**"மக்களே போல்வார் கயவர் அவரன்ன**
**ஒப்பாரியாங் கண்டது இல்" (திருக்குறள் – 1071)**

என்ற குறட்பாவில் காண முடிகின்றது. மேலும் அதனை விளக்கமாககயவர் எனப்படும் கீழ்மக்கள் நன்மை தீமைகளை ஆராயும் அறிவாளிகளை விட நல்லவர்கள். காரணம் அவர்கள் மனதில் நன்மை தீமை என்ற கவலையே இருக்காது என்றும் விரித்துரைக்கின்றார். நாலடியார்கயவர்கள் தன்னை ஒருவர் தவறான முறையில் பேசிவிட்டால் அந்த வசவுசொற்களை மனதில் நினைத்துக் கொண்டே பல காலம் மறக்காமல் இருப்பார்கள். செல்வம் தம்மிடம் அதிகமாக இருக்கும் போதும் அதனை யாருக்கும் தரமாட்டார்கள் என்ற நிலைப்பாட்டினையும் கடுங்கல் பாறை போன்ற மனமுடையவர் என்பதனை,

**"நீருட் பிறந்து நிறம்பசி யதாயினும்**
**ஈரங் கிடையகத் தில்லாகும் – ஓரும்**
**நிறைப் பெருந்செல்வத்து நின்றக் கடைத்தும்**
**அறைப்பெருங்கல் அன்னார் உடைத்து" (நாலடியார் – 360)**

என்று எடுத்துரைக்கின்றது.

**உதவும் குணம் இல்லாத கீழோர்**

கொடுமையான இயல்புகளை உடைய கீழ்மக்களில் சிலர் மற்றவர்களுக்கு உதவும் தன்மை இல்லாதவர்களாக இருப்பார்கள். கீழ்மைத்தன்மையுடைய அவர்கள் தம்முடைய கொடிய கைகளால் மற்றவர்களின் கன்னங்களில் ஓங்கி அறைந்து அவர்களது பல்லினை உடைக்கும் வன்மையான செயலைச் செய்வார்களே அன்றி, தம்மிடம் பிச்சைக் கேட்டு நிற்கக் கூடியவர்களுக்காகத் தம்முடைய எச்சில் கையினையும் உதராத கீழ்மையுடைவர்களாக இருப்பார்கள் என்பதனைத் திருக்குறள்

**"ஈர்ங்கை விதிரார் கயவர்கொடி றுடைக்கும்**
**கூன்கை யரல்லா தவர்க்கு" (திருக்குறள் – 1077)**

என்ற குறட்பா எடுத்துரைக்கின்றது. இக்கருத்தினை நாலடியார் கீழ்மைத்தன்மை உடையவர்கள் மற்றவர்களுக்கு இரக்கமும் காட்டமாட்டார்கள். எந்தவிதமான உதவியும் செய்யமாட்டார்கள் என்பதனை,

**"தளிர்மேலே நிற்பினும் தட்டாமற் செல்லா**
**உளிநீராம்மாதோ கயவர்அளி நீரார்க்கு**
**என்னானுஞ் செய்யார் எனைத்தானும் செய்யவே**
**இன்னாங்கு செய்வார்ப் பெறின்" (நாலடியார் – 355)**

**கீழ்மைக் குணத்தின் வெளிப்பாடு**

நிறைகுணம் இன்றி உள்ளவர்கள் தம்மைப் போன்ற அகந்தையான பேச்சினையும் கீழ்மை இயல்பினையும் உடையவர்களைக் கண்டால் அவர்களுடன் இணைந்து மேலும் போக்கிரித்தனங்களை செய்வர். இதனை குறட்பா,

**"அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்" (திருக்குறள் – 1074)**

என்று சுட்டுகின்றது. இவர் தம் குணத்தை மாற்ற இயலாது என்பதனை நாயின் தன்மையுடன் ஒப்பிட்டுரைக்கின்றது.

**"பொற்கலத்து ஊட்டிப் புறந்தரினும் நாய்பிறர்**
**எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும் அச்சீர்**
**பெருமை யுடைத்தார்க் கொளினுங் கீழ்செய்யும்**
**கருமங்கள் வேறு படும்" (நாலடியார் – 345)**

என்ற பாடலில் நாலடியார் விரித்துரைக்கின்றது. நறுந்தொகை, கீழோர் இயல்பை பலவகையான வாசனைகளால் நிறைத்தாலும் உள்ளிப்பூவாசம் வீசாது என்பதனை **"ஊட்டினும் பெல்விரை யுள்ளி கமழாதே" (குறுந்தொகை – 29)** என்று எடுத்துரைக்கின்றது.

**மாறுபடும் இயல்புடையவர்கள் கீழோர்**

நேரத்திற்குத் தக்கதாகத் தம்மை மாற்றிக் கொள்ளும் இயல்புடையவர்களையே நாம் கீழோர் இயல்பில் கூறுகின்றோம். அதனை வள்ளும்,

**"அச்சமே கீழ்மக்களது ஆசாரம் எச்சம்**
**அவாஉண்டேல் உண்டாம் சிறிது" (திருக்குறள் – 1075)**

என்று கூறுகின்றது. இதனை சற்றேமாறு தலாகமாறும் அவர்தம் இயல்பை நாலடியார்,

**"பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையாது**
**ஒருநடை யராருவர் சான்றோர் பெருநடை**
**பெற்றக்கடைத்தும் பிறங்கு அருவி நன்னாட!**
**வற்றாம் ஒருநடை கீழ்" (நாலடியார் – 343)**

என்று எடுத்துக்காட்டுகின்றது.

**கீழ்மையின் உச்ச செயல்கள்**

மிகவும் இழிவான குணத்தின் இழிவைச் சொல்ல திருவள்ளுவர் காணின், காண என்ற சொற்களைச் சுட்டுகின்றார். மற்றவர்கள் நல்லவிதமான உடை அணிவது, உணவு உண்பது, நல்ல முறையில் வாழ்வது என்பதனை நிலைகளைக் காணும் போது கீழானவர்கள் நேரடியாக அவர்களை ஏதும் பேசுவதின்றி, மற்றவர்களிடம் தூற்றிப் புறம் பேசுவதனை இயல்பாக அமைத்துக் கொள்வார்கள் என்பதனை எடுத்துரைக்கும் நிலையில்,

**"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**

**வடுக்காண வற்றாகும் கீழ்" (திருக்குறள் – 1079)**

என்று சுட்டுகின்றார். கொம்புளதற்கு ஐந்து முழம் குதிரைக்குப் பத்துமுழம் யானைக்கு ஆயிரம்முழம் எட்டியிருக்க வேண்டும் என்ற கருத்திற்கேற்ப பார்த்தாலேயே துன்புறுத்துவார்கள். எனவே அவர் கண்படாமலேயே இருப்பது நல்லது என்று வள்ளுவர் காண்என்கிறார். நாலடியார் இதனை,

**"கடுக்கொனச் சொல்வற்றாம் கண்ணோட்டம் இன்றாம்**
**இடுக்கண் பிறர்மாட்டு உவக்கும் அடுத்தடுத்து**
**வேகம் உடைத்தாம் விறன்மலை தன்னாட!**
**ஏகுமாம் எள்ளுமாம் கீழ்!" (நாலடியார் – 348)**

என்று தெளிவாகக் காட்சிப் படுத்துகின்றது. இப்படிப் பேசுபவர்களின் நாக்கு எப்படிப்பட்ட பொருளால் செய்யப்பட்டதோ என்று அவரேராணி நாலடியில்

**"கணமலை நன்னாட கண்ணின்று ஒருவர்**
**குணனேயும் கூறற்கு அறிதாம் – குணம்அழுங்கக்**
**குற்றம் உழைநின்று கூறும் சிறியவர்கட்கு**
**எற்றால் இயன்றதோ நா" (நாலடியார்– 353)**

என்று பேசுகின்றது.

**நிறைவுரை**

கயமை என்பது கீழ்மையான குணம் மட்டுமல்ல. மிகவும் கீழான குணமும் கூடகாரணம் திருவள்ளுவர் பொறாமை, புறங்கூறல் முதலான தீயசெயல் செயல்கள் இல்லை அறத்துப்பாலிலேயே பேசிய போதும் எப்போதும் எவராலும் விரும்பத்தகாத கயமை குணத்தைக் கூறாமல் விடக்கூடாது என்பதனால் பொருட்பாலின் நிறைவு அதிகாரமாய் வைத்திருப்போர் என்று தோன்றுகின்றது. பண்பானவர்கள் நிறைந்த பாரதம் உள்ளிட்டதான பூமி இன்று வம்பானவர்கள் உள்ளிட்ட கயவர்கள் பெரும்பாலும் என்பதாக மாறிவருகின்றது. மனிதர்கள் மனிதராக வாழ மனிதர் சொன்ன திருக்குறளும் நாலடியும் நம்வாழ்வை சீரடியாக்க பயன் கொள்ளவேண்டும். கீழ்மை நீங்கி நன்மை பெருகவேண்டும்.

**உதவிய நூல்கள்**

[1] அதீவீரராமபாண்டியன். *நறுந்தொகை* . நியூ செஞ்சூரி புக் ஹவுஸ், சென்னை.
[2] ஔவையார். *ஆத்திச்சூடி*. சாரதா பதிப்பகம், சென்னை-75
[3] ஔவையார். *கொன்றைவேந்தன்.* சாரதா பதிப்பகம், சென்னை-75
[4] சமணமுனிவர்கள். *நாலடியார்*. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-1,
[5] திருவள்ளுவர். *திருக்குறள்*. தென்றல் நிலையம், சிதம்பரம் - 1

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது